
# ஒரு சரித்திரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி வங்கக் கடலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வேங்கைகளின் முதலாமாண்டு நினைவுநாள்



மேஜர் வேலவன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
விநாயகசிறுகலை, பருத்தித்துறை.




கடற்புலி கப்டன் ஜீவா
நடராசா டிமார்க்ஜெயராஜ்
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்.



கடற்புலி
கப்டன் குணசிலன்
(குணராஜ்)
சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா
2-ம் குறுக்குத்தெரு,
உதயபுரம், மணியம்தோட்டம்.



கடற்புலி
கப்டன் றொசான்
இரத்தினசிங்கம் அருணராசா
அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



## கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை



## லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

---

## 16.01.1994



கடற்புலி
கப்டன் நாயகன்
சிவலிங்கம் சேகரன்
பொலிகண்டி, வல்வெட்டித்துறை



கடற்புலி
லெப். தூயவன்
மகாலிங்கம் ஜெயலிங்கம்
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.



கடற்புலி
லெப். நல்லவன்
சிவஞானசுந்தரம் ரமேஸ்
மணியத்தோட்டம் கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்




கடற்புலி
லெப். அமுதன்
அலோசியஸ் ஜான்சன்
3-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " ஒரு சரித்திரம் தீக்குளித்தது "

## கவிதைத் தொகுப்பு

ஆக்கம் : கவிதா ராஜன்



World
TAMIL MOVEMENT

வெளியீடு : உலகத் தமிழர் இயக்கம் கனடாக்கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இன்று தமிழீழப் போராட்டம் கூர்மையடையவும், அது சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படவும் பங்களிப்பே முக்கிய காரணமென்றால் மிகையாகாது. விடுதலை வேட்கையோடு நாம் செய்யும் ஒவ்வொரு உதவியும் களம் சென்று போராடும் எம் தமிழ் வீரர்களின் கரங்களைப் பலப்படுத்துமென்பதை நா மென்ன உணராதவர்களா?

அதை உணர்ந்து உள்ளார்ந்த விடுதலை வேட்கையோடு ஒத்துழைப்பு நல்கும் ஆயிரமாயிரம் விடுதலை விரும்பிகளின் செயல்ப்பாட்டில் கவிதா ராஜனின் கன்னி முயற்சியும் குறிப்பிடத்தக்கதாகும்.

தனியொரு சாதி பேதம்
தவிர்த்தொரு ஈழம் காண்போம்

என்று எதிர்பார்க்கும் அந்த இளம் கவியின் கனவு நனவாகும் காலம் தொலைவிலில்லை என்று சொல்வோம்.

செந்தமிழ்ச் சோலைக்குள்
வெள்ளெருக்கும் பூத்ததடா
சந்தனக் காட்டிற்குள்ளே
சர்ப்பமும் வாழுதடா
சொந்த மண்ணைப் பகைவரிடம்
சோற்றுக்காய் விலை பேசு
மந்த மதி மானிடரை
எந்தவகை என்பதடா ?

அவன் பூதவுடல் தீண்டிய
தீயின் வெப்பத்தில்
பொங்கி எழும் கடல் அலையே !
தரை மீது நீ வந்து
தலை மோதிப் பயனென்ன
உத்தமனை நீ கரைத்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தின் சம்பளமாய்
காலமெல்லாம் நீ
ஓலமிட்டு அழுதிரு !

இவை கவிஞனின் உணர்ச்சித் துடிப்பை வெளிக் கொணரும் கவிதைக் கண்ணாடிகள். தமிழீழத்தின் அடிமை இருள் போக்கத் தம்மை அக்கினிக் குஞ்சுகளாக்கிய மறவர்களை மதித்து அவர்களை ஏற்றிப்போற்றும் கவிதா ராஜனின் கவிதைப்பூங்காவின் உட்சென்று அனுபவிப்போம்.

மா.ஜெகன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவணக்கம்

விடுதலைக் களம் நடுவே
செங்குருதி நீர்பாய்ச்சி
கேடுகளை யகற்றி நல்ல
சுதந்திரப் பயிரைக் காக்க
உடல் பொருளாவி யெல்லாம்
உரமெனத் தமிழுக் கீந்த
உத்தமமா வீரர் தாள்கள்
போற்றி நாம் வணங்குவோம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உங்களுக்கு !

ஈழமண்ணிலே முற்றுப் பெறாத காவியங்களாக விடுதலைப் பயணத்தின் பாதிவழியிலேயே சாவுதனை அழைத்த வீரவேங் கைகளை எண்ணிப் பார்க்கும்போது விழிகளைக் கண்ணீர ம றைத்து விடுகிறது, இதயத்தில் இரத்தம் உறைந்து கொள்கி ன்றது.

ஏன் இந்த சாவுகள்? வசந்த காலத்தின் வாலிபத் தென்ற லில் சுகம் தேடவேண்டிய இந்த இளம் செடிகள் வசந்தத்தை விரட்டிவிட்டு இலையுதிர்வை எதற்காகத் தேடிக்கொண்டன.

ஈழத்துத் தமிழினமே உனக்காக! உன்மானத்தின் விலை யாக தம்முயிரைத் தியாகம் செய்தார்கள். உனது சுதந்திர தாகத்தைத் தீர்ப்பதற்காக உடல்,பொருள்,ஆவியெல்லாம் செங்குருதியாய் களத்திலே தாரைவார்த்துக் கொடுத்தார்கள். தமிழீழத் தேசியத் தலைவன் வளர்த்த விடுதலையாகத் திற்கு உயிர்ப்பலி கொடுத்துப் புனிதப்படுத்திக் கொண் டார்கள்.

சில்லறை நாணயங்கள் சிதறிக் கிடப்பது போல் தமிழீழமெங் கும் வீரவேங்கையின் கல்லறைகள் பரவிக் கிடக்கின்றன. இந் தக் கல்லறையின் புதைகுழியில் நம் வீரவேங்கைகள் புதைக் க்கப் படவில்லை.அவர்கள் விரும்பிக் குடிபுகுந்தவர்கள்.

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கமய தம் தலைவனின் கண்களிலே நீர்மல்க சாக்காட்டை யாசித்துப்பெற்றவர்கள்.

ஈழதேசத்து மக்கள் அனைவ ரும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக சோதனையில் உலர்ந்துவரும் வெப்பக் காற்றை சுவாசித்தபடி செங்களத்திலே சிங்களத்தை சிதறடித்துவரும் செந்நீர் குளத் திலே புரட்சியில் பூத்த இந்த சாதனைப் பூக்கள் உதிர்ந்த போதும்,ஈழவரலாற்றில் என்றும் ஈரம்காயாத மலர்களாக வாசனைகொடுத்துக் கொண்டே இருக்கும்.

உலக அரங்கிலே பல மூத்த விடுதலை இயக்கங்கள் சாதித்ததைவிட ஈழத்திலே தமிழீழ விடுதலைப் புலிகளின் சாதனை பன்மடங்கென நாடும்,ஏடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்ட,சுதந்திரத்தின் உதயத்தைத் தமிழீழம் காணவேண்டும் காணவேண்டும் என்ற கொள்கைத் திட்டத்தோடு,தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்றுவித்து,பல சாதனைகளைப் படைத்துவரும் தலைவர் திரு.வே.பிரபாகரன் மேல் கொண்ட விசுவாசத்தால் அந்த தலைவன் காலத்திலே தமிழீழம் வென்றெடுக்கப்படும் என்ற அசையாத நம்பிக்கையோடும்களத்திலே மோதி உயிர்தியாகம் செய்த தியாகசீலர்களின் தியாகத்திற்காக நாம் வடிக்கும் கண்ணீர்த் துளிகளை அந்த ஆத்மாக்கள் ஒரு போதும் அங்கீகரிக்கப் போவதில்லை.

விடுதலைப் போரின் அவசியத்தை ஒவ்வோர் தமிழனும் தேர்ந்து,தெளிந்து களத்திலே நின்று உங்கள் ஆதரவுக்காய் குரல் கொடுக்கும் போராளிகளுக்கு ஆதரவுக் கரம் கொடுத்து அரவணையுங்கள்.

பலம் கொண்ட எதிரியோடு பயம் சற்றும் இல்லாமல் தமிழீழம் ஒன்றே ஜீவநாடி என இமயத்தோடு மோதிக் கொண்டிருக்கும் அந்த இளம் தென்றல் களின் போராட்டம் வெற்றிபெற உங்களால் ஆவன செய்ய முன்வாருங்கள்.இதுவே தியாக வேங்கைகளுக்கு நீங்கள் செய்யும் நன்றிக்கடன்.

"நான் உல்லாச விரும்பி அல்ல. அது என் இயல்பும் அல்ல. உல்லாசத்தை விரும்பினால் உல்லாசமாக இருக்கலாம். அது என்னால் முடியாது." -கிட்டு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையிலோர் அக்கினிக்குஞ்சு

எதிரிகளை சுட்டெரிக்கும்
தீப்பொறி யென்றே
வல்வையிலே பிறந்ததிந்த
அக்கினிக் குஞ்சு
தாலாட்டில் தாய் சொன்னாள்
தமிழின மானம்
தன்பாலில் சேர்த்தளித்தாள்
புறத்தமிழ் வீரர்

கல்வி கலைஞானமெல்லாம்
கற்றவன் தேர்ந்தான்
செல்வமைந்தன் சீர்கண்டு
பெற்றவர் மகிழ்ந்தார்
கொத்தடிமைக் கொடுமைகளை
நேரிடை கண்டான் - மானம்
செத்தழியும் தமிழினத்தை
காத்திட விளைந்தான்

ஈன்று புறம் தந்து அன்னை
தன்கடன் முடித்தாள்
சான்று பல தந்து தந்தை
புகழுறச் செய்தான்
தோன்று படை வென்று பிள்ளை
மாலைகள் சுமந்தான்
ஈன்ற **போழ்தில்** பெரிதுவந்து
பெற்றவர் மகிழ்ந்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்தில் கேட்கும் கீதம்

ஈழத்தேசமே இதய கானமே
உதய கீதம் கேளாதா
உனது மடியிலே இளைய தலைமுறை
கருகுதல் என்றும் தீராதா
விடைகளைத் தேடும் கேள்விகளாக
ஈழவர் வாழ்க்கை மண்மேலே
சுதந்திர வாசனை இதம்தரும் கீர்த்தனை
நம்மவர்க் கென்ன வெகுதூரமோ
ஈழத்தேசமே.........

தாயே தமிழே தமிழர் உயிரே
உனக்கொரு தேசம் சமைத்திடவே
பாயும் புலியாய் செருக்களம் சென்றோம்
எத்தனை உயிர்கள் விலை தந்தோம்
பூம்புனல் பொய்கை நிறைந்த நம் தேசம்
கல்லறை நிறைந்திட காண்போமா
இன்னும் எத்தனை உயிர்விலை ஆயினும்
கொடுத்துனை மீட்கும் புலியம்மா
ஈழத்தேசமே...........

விடுதலைக் களத்தில் புலியின மறவர்
சாதனை கோடி நீயறிவாய்
கரும்புலியென்றே மானிடக் குண்டாய்
பாய்ந்திட உலகம் வியந்ததம்மா
தேசியத் தலைவன் கூறிய மந்திரம்
தலையதில் சுமந்தே வழிநடந்தோம்
தாயகமுன்னைச் சேர்ந்திடும் நாளே
புலிகளின் தாகம் தீருமம்மா
ஈழத்தேசமே........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனக் காட்டிற்குள் சர்ப்பங்களா?

தமிழினக் குருதி பாய்ந்து
ஈழமே சிவந்த பின்னும்
தாயுடை கற்பு தன்னைக்
கயவரே பறித்த பின்னும்
ஆயிரம் ஐந்து பத்து
வாங்கியே தமிழை விற்கும்
நாயினம் நமக்குளின்னும்
வாழுதல் கண்டு நொந்தேன்

செந்தமிழ்ச் சோலைக் குள்ளே
வெள்ளெருக்கும் பூத்ததடா
சந்தனக் காட்டிற் குள்ளே
சர்ப்பமும் வாழுதடா
சொந்த மண்ணைப் பகைவரிடம்
சோற்றுக்காய் விலை பேசும்
மந்த மதி மானிடரை
எந்த வகை என்பதடா

அறுவடை நாள் குறித்து
விடுதலைப் பயிர் வளர்த்தோம்
களையிடை வளர்ந்து வந்து
அமிழ்ந்திட மனமழிந்தோம்
களத்திடை கொடுத்த தெல்லாம்
உயிர்ப்பலி குருதி வெள்ளம்
கடைகெட்ட களைகளை நாம்
அழித்ததில் ஏது குற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறிகெட்ட பாரதமே!

நெறிகெட்ட பாரதமே
அகிம்சையின் அரிச்சுவடியை
அறிமுகம் செய்தது நீயென்று
அகிலம் புகழ்ந்தது உன்னைத்தானே

இந்திய நாடெம் அயல்நாடு
தமிழ் பிறந்த பொதிகை வளநாடு
என்று புகழ்ந்து நம்
பாலபோதினிகள்
பகர்ந்ததும் உன்னைத்தானே

பாதி இரவிலே
ராஜபோகம் விட்டு
போதி மரம் நாடி
போன சித்தாத்தன்
போதித்த மனுவேதம்
பிறக்கச் சிறந்ததொரு
பாரதம் என்பதும் உன்னைத்தானே

இன்னும் ஒரு மனிதன்
இவன் போல இல்லையென்று
வையம் வியந்து நிற்க
உன் மகவை
உனக்காக உயிர்நீத்த
காந்தி மகானை
பெற்றெடுத்த தேசமென்று
பரணிகள் பாடுவதும் உன்னைத்தானே

இன்னும் பலகோடி
புகழாரம் சுமந்த மண்
ஆபிரிக்க மக்களுக்காய்
முதற்கை கொடுத்த மண்
பலஸ்த்தீன விடுதலையை
பலப்படுத்த ஐ.நா வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவு வேண்டியன்று
முன்மொழிந்து உயர்ந்த மண்
இத்தனை புகழ் படைத்த
மண்ணென்று மாற்றார்
மனமுவந்து வாழ்த்தியதும் உன்னைத்தானே.

வான வெளியினைப் போல்
புகழ் செறிந்த பாரதமே
சோதரர் போலென்றும்
உன்னோடு கைகோத்து
வாழ்ந்த தமிழீழ
மக்களை நீ வஞ்சித்து
தாழ்ந்து தறி கெட்ட
பாரத தேசமென்று
உன் முகத்திரையைக் கிழித்து
அடையாளம் காட்டி விட்டாய்
உன்னை வளர்த்த முன்னவர்கள்
முகத்திலன்றோ கரியைப் பூசிவிட்டாய்.

ஈழத்தமிழர்க்கு
நீ விளைத்த கொடுமைகள்
ஒன்றல்ல இரண்டல்ல
நிரையிட்டு நாம் சொல்ல

இனவாத பேரரசின்
இடுக்கண் தாங்காமல்
தினமழுது சாகின்ற
தமிழீழ மாந்தர் துயர் நீ
அறியாத புதிரல்ல

கலவர மழை பொழியும்
அதில். . . . . . .
தமிழர் செல்வமெல்லாம் கரையும்
காவற் படையென்னும்
வேலியே பயிர் மேயும்
வனவிலங்கு காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமுள்ள நம் நாட்டில்
தமிழனத்தைக் காக்க
விதியெழுதா விதியிங்கே

நாதியற்று வீதியெல்லாம்
நாற்றமுறும் தமிழ்ப்பிணங்கள்
வோட்டு வாங்கிப் போனவரும்
நோட்டு மெத்தை விரித்தங்கே
மெய்க் காவல் துணையோடு
ஒய்யாரத் தூக்கத்தில். . . . .

பிஞ்சு நெஞ்சங்களில்
வெஞ்சினம் வளர்ந்தது
புறத்தமிழ் நூறு சொன்ன
மறத்தமிழ் வீரரென்று
புதுத்தமிழ் நூறு சொல்ல
புறப்பட்டார் இளைஞரெல்லாம்

சினவேங்கை போலெழுந்து
சீறிப் பாய்ந்து
இனமானம் காக்கும்
விடுதலைப் புலியினத்தின்
வரலாறு உலகறியும்

அன்றொருநாள். . . . .
தமிழினத்தைக் காக்க நல்ல
விதி சமைப்போம் வாவென்று
எங்கள் குணக் குன்றை
குலங்காக்கும் தலைமகனை
அன்புக் கரம் நீட்டி
உடன் அழைத்தாய் பேசுவதற்கு
உறவுக்குக் கைகொடுக்கும்
உயர்ந்த உள்ளத்தால்
தமிழுக்கு வாழ்வுண்டு
என்றழைத்த காரணத்தால்
தலைவனும் செவிமடுத்து
பாரதம் வந்திருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதியிலே தங்க வைத்து
வேண்டாத விதிசமைத்து
ஒப்புதல் நீ கேட்டாய்
ஒக்குமா அவன் நெஞ்சம்
அங்கம் பொடிபட
வெட்டிச் சிதைத்தாலும்
அக்கினியில் போட்டென்னை
சுட்டு எரித்தாலும்
விடுதலைப் புலிமறவர்
கொண்ட கொள்கையது
திரிபுற மாட்டாரிது
அறியீரோ பேடியரே!
எனச் சினந்து - சொல்லம்பு
விட்டழவே தோற்றதுன்
சதி வலையின் சாணக்கியம்

உணவுப் பொட்டலத்தோடு
உறவாடி வந்த உன்னை
உற்ற உறவென்றே
வாழை மரம்கட்டி வரவேற்றார்
தமிழ் மாந்தர்

வேளை பார்த்திருந்து
தீண்டும் விடவரவாய்
கூடவிருந்து குழிபறிக்க
வேடமணிந்து வந்திருந்தாய்

குமரப்பா பெயர் சொன்னால்
குவலயமே நடுநடுங்கும்
குறி வைத்தாய் அவன்மேல்
அவனோடு தளமிருந்த
பதினொர் வேங்கையரும்
உன் கைதி ஆனார்கள்

தமிழரெல்லாம் கெஞ்சியழ
தமிழ் மானம் காத்தவரை
தரம் கெட்ட அரசிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளிக்க நீ முனைந்தாய்
தன்மானம் மரிப்பின்
தாம் வாழார் புலிகளென்று
மரணமதை மகிழ்ந்து ஏற்றார்

**நரி மனம் கொண்டு நெஞ்சில் சுமந்து வந்த**
**குறுமதி கண்ட மாந்தர்**
**வெடித்தனர் எரிமலையாய்**

ஆயிரம் சிறுபயல்கள்
அத்தனையும் சிதறடிக்க
பகலொன்று போதுமென
டெல்கியில் இடிமுழக்கம்
வல்லரசு நிரையிலே
வகை பிரித்த பாரதமே
சில்லறைக் கணக்காலே
ஆனதென்ன ஆகமொத்தம்

ஆயிரம் பலவாக
இராணுவங்கள் பலியாக
ஆளைவிட்டால் போதுமென்று
ஊரைவிட்டு ஓடி விட்டாய்

நீ மறந்த காந்தியை
நினைவூட்ட விளைந்த போது
நீயொரு கோட்சேயாய்
திலீபனென்னும் தமிழமுதை
தீயிலிட்டுப் பொசுக்கி விட்டாய்
அந்தோ
இந்துக் கடலிலே
உன் கழுகு விழிபட்டு
ஓர் மெழுகுவர்த்தி அணைந்து கொண்டது
பாவ மூட்டைகளைச் சுமந்த
உன் முதுகிலே
நிரந்தரமாய்க் கூனல் விழுந்து விட்டது
வானோங்கி வளர்ந்த தீயிலே
வெந்தது ஈழமறவரா
இல்லை. . . . . இல்லை
பாரதத் தாயின் முந்தானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சரித்திரம் தீக்குளித்தது

வங்கக் கடலே
உன் மடியிலே
ஒரு சரித்திரமல்லவா தீக்குளித்துக் கொண்டது
அவன் பூதவுடல் தீண்டிய
தீயின் வெப்பத்தில்
பொங்கி எழும் கடல் அலையே!
தரைமீது நீ வந்து
தலைமோதிப் பயனென்ன
உத்தமனை நீ கரைத்த
பாவத்தின் சம்பளமாய்
காலமெல்லாம் நீ
ஓலமிட்டு அழுதிரு


கடலோரக் காற்றே
எங்கள் தளபதியின்
உணர்ச்சி அணுக்களை
தரை நோக்கி நீ சுமந்து
தமிழீழ ஜீவிகளின்
சுவாசத்தில் சேர்க்கின்றாய்
இனி. . . . .
ஈழவர் அத்தனையும்
கிட்டுவின் விம்பங்களே

அதோ. . . . .
வானவெளிப் பரப்பில்
ஆங்காங்கே மின்னுவதெல்லாம்
விண்மீன்களல்ல
விடுதலைக்காய் உயிர் கொடுத்த
வீர மறவர் தம்
கண் மீன்களன்றோ
அதன் நடுவே
பிரகாசிக்கும் தீ வட்டம்
குளிர் ஒளி நிலவல்ல
எங்கள் தளபதியின்
ஒளி மிகு முகமன்றோ
நிலவென்று ஒளிர்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவனின் கண்ணீர்ப் பூக்கள்



என் இதயமே!
தமிழ் மண்ணின் உதயமே!
உன்னையா நான் இழந்தேன்
இல்லை. . . . . இல்லை
என்னையே நான் இழந்தேன்
ஒரு விநாடி
உன்னோடு நான் வரவா
என்றென்னை நான் கேட்டேன்
என் செய்வேன் தோழா
என் உயிரை விடுவதற்கு
எனக்குரிமை இல்லையடா
தமிழீழ விடுதலைக்கு
என்னுயிரை விலைபேசி
ஆண்டு பல ஆனதடா
கதிர்முற்றி அறுவடைக்கு
நாளாகும் வேளையிலே
போரடித்துக் காணாமல்
ஏர் உழவன் சாய்ந்தது போல்
மலர்ந்து வரும் ஈழமண்ணின்
விழாக் கோலம் காணாமல்
வீரச் சாவணைத்தாய்
என் ஈரவிழி காயவில்லை

அன்றொரு நாள். . . . .
உன் கால்கள் ஊனமுற
என் தோளில் நீ சாய்ந்து
தலைவா . . . . .
கால்புண் தீரும்வரை
களம் செல்ல சில நாட்கள்
ஓய்வு பெற வேண்டுமா?
வீரனுக்கு இடைவேளை
வெற்றிக்குப் பின்தானே
புண்ணது புரையோடி
என்னுயிரைத் தின்றாலும்
இன்றே களத்திற்கு
நானேக வேண்டு மென்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமிங்கே காத்திருக்கு
தலைவன் விழி பூத்திருக்கு
தளபதியே நீ எங்கே.....


சரித்திரம் சொல்லாத
சம்பவங்கள் பலகோடி
உன் சம்பவங்கள் அத்தனையும்
சரித்திரம் ஆனதடா
அந்தோ.....
தமிழீழ மாவீரன் உன்னைச் சுற்றி
தரங்கெட்ட இந்தியர் சூழ்ந்து கொண்டார்கள்
தஞ்சமென வரச்சொன்னார்
விஞ்சுபுகழ் வீர வேங்கை நீ
வஞ்சகரை சேர்வதிலும் வீர மறவனாய்
துஞ்சுவதே மேலென்று
தமிழீழத் திசை நோக்கி
சிலவார்த்தை நீ உதிர்த்தாய்
" ஈழத்தமிழ் மண்ணே!
விரும்பி நானின்று சாவை அணைக்கின்றேன்
இருந்தும் ஓர்கவலை
உடலாலே உனைப்பிரிந்து
நாட்கள் சில நகர்ந்து
உணர்ச்சியின் வெப்பத்தால்
உள்ளமும் தீப்பிடிக்க
தாயே உன் முகத்தை
தழுவி நான் முத்தமிட்டு
மனத்தீயை நான் அணைக்க
விரைந்தேன் உனைத் தேடி
மரணமதை முந்திக் கொண்டது
மரித்து விழும் உடல் கூட
உன்மடியில் சாயவில்லையே என்ற
கவலையெனை வாட்டுகிறது
தானைத் தலைவன்
தந்த தாரகத்தைச் சொன்னபடி
உன்திசையை நோக்கி
கண்ணீர்ப் பூத்தூவி
இறுதி வணக்கத்தை தருகின்றேன் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீக்குளிக்கும் எங்களுடல்
தீய்ந்து அது சாம்பராகி
காற்றோடு கலந்து வந்து
தமிழீழ மண்ணையது
காலமெல்லாம் தழுவி நிற்கும்"

வீரத்தின் விளைநிலமே !
நீ தந்த வாசகங்கள்
நெஞ்சில் நீங்காத வேதங்கள்
நான் மரிக்கும் நாள்வரையும்
என் நெஞ்சம்
நீயிருக்கும் திருக்கோயில்.



"சுதந்திர தாய்நாட்டைப் பெற ஒவ்வொரு தாயும் போராடுகிறாள்
மலரும் தமிழீழத்தில் நம் குழந்தைகள் இனிதாய் வாழப் போகின்றன."

அன்னை பூபதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவர் உணர்ச்சிக்கோலம்

செத்தது நீ யில்லை
சத்திய தர்மமடா
உத்தமர் வாழந்த தில்லை
இது நித்திய வேதமடா
நித்தம் நித்தம் செத்தழியும்
தமிழினத் துயர் துடைக்க
செங்களத்தில் வேங்கையென
சிங்களவர் தலை பறித்தாய்
நாட்காட்டி நாம் கிழித்தால்
ஒவ்வொன்றும். . . . .
உன் சாதனைப் பட்டியல்கள்
தமிழீழத் தாயகமே
தமிழர்குலத் தாகமென்ற
தமிழீழக் காவியத்தின்
முகவுரையை நீ எழுதி
விடுதலைக் களம் நோக்கி
முதற் சுவடு நீ பதித்தாய்
முடிவுரையை நெருங்கி விட்ட
தமிழீழக் காவியத்தின்
அரங்கேற்றம் காணாமல்
வீரசொர்க்கம் நீ அடைந்தாய்
சாவு எனும் பேரரக்கன்
சாகும் நாள் எப்போது
நல்லவரை தானழைக்கும்
வஞ்சனைக்கு முடிவேது

களமாடும் வேளையிலே
கால் போன பின்னாலும்
குடமாடும் தேரையென வாழ்வா
ஊனமது உடலுக்கு
மறத்தமிழ் வேங்கைகளின்
**உணர்ச்சிக்கு ஊனமில்லை**
என வெழுந்த வேங்கையே!
துஞ்சுமுயிர் துஞ்சட்டும்
மிஞ்சினால் அது எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்து வரும் தமிழீழ
மண்ணையது கொஞ்சட்டும்
அதுவரையில் நான். . . .
தூங்குமிடம் செங்களம் தான்
துவக்குகளே தலையணைகள்
இந்த வீர வார்த்தை யெல்லாம்
நீ விட்டுச் சென்ற
வேத வாக்குகள்
வேகுதிங்கே தமிழர் உள்ளம்
உன் பிரிவு தாங்காமல்

உறவுக்குத் தோள் கொடுத்து
உலகமெல்லாம் பறந்து சென்று
அமைதிக்கு தூது கொண்டு
விரைந்து வந்த வெள்ளைப் புறா
பாதியிலே சிவந்தது ஏன்
சத்திய தர்மமே செத்து விட்ட பாரதம்
சதிவலை விரித்தது சரணபட அழைத்தது
வீரத்தின் விளைநிலமாம்
ஈழத்தமிழ் மாவீரன்
தமிழ்த் தாய்மடி தவழ்ந்த உடல்
நீ தொடக் கூடாதென்று
பொடிபடத் தன்னுடல்
வெடியினில் சிதைத்தனன்
இந்திய தேசமே!
அவன் சிந்திய குருதியை
பருகிய மீன்களும் புலியென மாறிடும்
அழிந்தது அவனுடல்
உணர்ச்சிகள் அழியுமா
தமிழ்த் தாய்மடி தவழ்ந்திடும்
குழந்தைகள் அனைவரும்
**நாளைய கிட்டுகள் ஆவது நிட்சயம்**
உன் பகை முடித்திட
விளைவது நிட்சயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே எனக்காய் அழ வேண்டாம்

புலியினம் விளைந்த குகையினை ஒக்கும்
என்னுயிர் வளர்ந்த கருவறை
தினபுய மறவர் செருக்களம் போலும்
என்னுடல் புரண்ட தாய்மடியும்
பகைவிடு வேலது புறமுது கேற்றல்
முலையது எதற்கு எனவிளைந்த
புறத்தமிழ்க் கிளத்தி மரபினில் வந்த
தாய்மையின் தாயே நீ வாழ்க !

வேழநெடும்படை மோதிப் பொடிபட
வீரம் விளைப்பேன் பார் தாயே
ஈழமணித்திரு நாடு சமைத்திட
கொடுவாளை சுமக்குமென் தோள்தானே
பாயும் சிறுநரிக் கூச்சலுக் கென்றும்
வேங்கைக்கூட்டம் மிரளாது
வேகும் உடலிது போகும் நாள்வரை
தமிழினைக் காப்பேன் தாயாணை

அறிவறை போகிய மன்னர் முறையும்
பொறியறு நெஞ்சக் காவலர் பணியும்
நெறிமுறை பொய்க்கத் தமிழின மழிய
செறிகட லானது தமிழிரத்தம்
வரையறை மீறிய கொலை வெறி யாட்டம்
பிணம்சுடு காடாம் தமிழ்ப்பூமி
முறைமுறை காக்கச் செருக்கள காவிய
முகவுரை யெழுத விடைதா தாயே !

சென்று வாவெனச் சொல்வாய் நீயென
தொழுது நின்ற மைந்தனை நோக்கி
வென்று வாவென விளம்பிய தாயே
சொல்லினைச் சொல்லால் வென்றது நீயே
ஏகி இன்தமிழ் காத்து
தமிழ் நிலமதனை பகையிடம் மீட்டு
வென்றொரு தமிழர் தாகம் தணித்து
தாய்முகம் காணவா வென்றாயோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுன் மகவு விடியலின் முன்னே
மரணக் குழியில் வீழும் சோகம்
கன்று பிரிந்த பசுதுயர் போன்று
தாயே எனக்காய் அழுதிடு வேண்டாம்
வென்றால் தானே வரவு சொன்னாய்
வென்றிட முன்னே எப்படி வருவேன்
இன்றோ டழிவது என்னுட லானால்
என்னுயிர் ஈழம் கண்டே தீரும்

# அவளோடு சில வார்த்தை

மலரே
உன்னை நான்
மனைவி என்று அழைப்பதை விட
என்
போராட்ட வாழ்வின்
துணைவி என்றே சொல்வேன்
முட்கள் நிறைந்த என் பாதையில்
உன் வரவு
நீ விரும்பியேற்ற பயணம்
நம் வாழ்வில்
மலரணைப் பள்ளியறைகள் இல்லை
துப்பாக்கிகள் தலையணைகளாக
வெறும் தரையிலே கண் துயின்றோம்
அந் நாளிலே ....
நீ சொன்ன வார்த்தைகளை
என் நினைவுத் திரைகளில்
ஓடவிட்டுப் பார்க்கின்றேன்
நீ எனக்கு
துணைவியாக மட்டுமல்ல
துன்பங்களின் சுமை தாங்கியாகவும்
வாழும் நிலை வருமென்றேன்
ஒரு வேளை ....
பாதியிலே என் பயணத்தில்
திரை விழுந்து விடலாம்
அன்று
நீ உன் துணை இழப்பாய் என்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது நீ
உன் முகத்திலே வீரம் இழையோட
தலைவா !
தமிழீழ மண்ணிலே
ஓர் கோழைக்கு மனைவி என்ற
பெயர் கொண்டு வாழ்வதிலும்
வீரனுக்கு விதவை என்ற
பெருமை கொண்டு வாழ்வதே
தமிழீழப் பெண் பெருமை
எனவுரைத்த வாசகங்கள்
என் செவியிலே
நின்றொலித்துக் கொண்டிருக்கின்றன
தூயவளே !
இன்னும் சில வினாடிகளில்
என்னுடலை நானே
தகனம் செய்து கொள்ளப் போகிறேன்
என் மரணச்சேதி கேட்டு
நீ மௌனித்து விடாதே
இன்று முதல் -நீ
வீரனின் விதவை மட்டுமல்ல
விடுதலைப் புலி மறத்தியர்
துணையிருக்கும் சுதந்திரப் பறவை
உன் இரு விழிகளால்
நாளை மலரும் தமிழ் மண்ணை
கண்டு நான் களிப்புறுவேன்

"உன்னால் எவ்வளவு முடியுமோ அதற்கு மேலாக மற்றவர்களுக்கு உதவிசெய். சேவை என்பது கடமைதான். கடமையில் தவறாதே."

-கிட்டு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாச நிலாவும் பாயும் புலியும்

அறத்தினால் நிறைந்த சிந்தையும் அன்பொழுகு
குணத்தினால் கனிந்த பார்வையும் தமிழீழத்தில்
விளைந்ததொரு காதலால் தாய்மையை வென்ற பாசமும்
நிறைந்த நம் கிட்டுவை கிட்டுதல் கூடுமோ

கிட்டென்பார் கிட்டரென்பார் சிறுமழலை வாய்திறந்து
மட்டிலா அன்போடு கிட்டுமாமா வெனவழைக்கும் - இவனென்றும்
பைந்தமிழர்க்கோர் பாசநிலா சினமென் றெழுந்தால்
பகைவர்க்கோ பாயும்புலி யறிவீர்

தனக்கன்றி தமிழர் தமக்கென்று வாழ்ந்து
இனக்கொடுமை தீரநிதம் வெங்கள மாடியவன் - தமிழர்
மனக்குறை யகற்றத் தன்னுடல் தகனம் செய்த
குணக்குன்றினை இழந்திடத்தாங்குமோ மனம்

பகையறிவான்தன் படையறிவான் இடம்பொருள் காலமெனும்
வகையறிந்தே வரும்பகை வெல்வான் இவ்வுலகில்
மிகையில்லை யிவன்தான் மாவீரரெனச் சொன்னால் மாந்தரிற்
தகையினிற் பெருந்தகை இவனன்றி யாரோகாண்.

வளையாத வீரமும் வாய்மை தவறாத நேர்மையும்
நிலையான கொள்கையது கோடாத நெஞ்சமும்
முனிந்தவை முடிக்கும் நிறைந்த மதி நுட்பமும்
கொண்டதொரு மறவன் கிட்டன்றி யாருளரோ.

"எப்போதும் ஏழைகளுக்காகவும், மக்களுக்காகவும்,
உழைக்கவேண்டும் என்பதையே மனதில்
வைத்திருக்க வேண்டும்."

-கிட்டு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்திலே கரும்புலிகள்

தமிழே நினைவாகித்
தமிழே மூச்சாகித்
தமிழே உடலுமாகித்
தமிழ் மாந்தர் துயர்
காப்ப தொன்றே செயலுமாகிப்
பீரங்கியோடு வரும்
பலங் கொண்ட எதிரிமுன்னே
மானிடக் குண்டுகளாய்
பாய்ந்து பகை முடித்து
நம்மவர் நலனுக்காய்
தம்முயிரைத் துச்சமென
தந்த கரும்புலிகள்
தியாகத்தை நினைக்காத
நெஞ்சென்ன நெஞ்சோ


இன்றே இக்கணமே
இறப்போம் எனவறிந்தும்
நன்றே நாடு நலன் பெறில்
நம்முயிர் தான் விலையென்றால்
அன்றே அவ்வளவே
போகட்டும் உயிரென்று
மனுக் குண்டாய் மாறி
பகைவர் உயிர் குடித்த
கரும்புலிகள் வீரத்தை
பாடாத வாயென்ன வாயோ

நான் என்பான்
இல்லை... இல்லை...
நான் என்பான் மற்றொருவன்
இக்கடன் முடிக்கும்
இயல்புண்டு எனக்கென்பான் இன்னொருவன்
பொன் பொருளைக் கொடுப்பதற்கே
பொறுக்காத மாந்தர் முன்
தன் உயிரை கொடுப்பதற்கு
முன் செல்லக் கேட்கும்
என்னே இவர் துணிவு
என்றே கரும்புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சிதனை எழுதிப் பரவாத
கையென்ன கையோ
இரும்பல்ல இதயம்தான்
துரும்பல்ல ஆருயிர்தான்
கரும்பல்ல ஆலையில் சிதறிட
விரும்பிக் காத்த உடல்தான்
தாயக விடிவினாலே
தாகமும் தீருமென்ற
தலைவனின் தாரகம் தந்த பலமோ
இதயமும் இரும்பாக்கி
இன்னுயிரும் துரும்பாக்கி
விரும்பிய உடலும் ஆலைக்
கரும்பாக சிதறிவிழ
சாதனை படைத்துயர் சாவினை ஏற்ற
கரும்புலிகள் கதைகேளாச்
செவியென்ன செவியோ......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்புலிகள்

ஈழவிடுதலை என்று எழுந்தனர்
தமிழ் ஈழக் கடற் புலிகள்
ஆழநெடுங் கடலாடி மகிழ்ந்தனர்
தமிழ் ஈழக் கடற் புலிகள்
அரச படையினர் ஓடி ஒழிந்திடும்
சாதனை படைத்தனர்
இராசபடைக்கலன் டோறா சிதறிடப்
பாய்ந்த கடற் புலிகள்

கடல்வளம் நிறைந்த ஈழவளத்தை
எத்தர்கள் கொள்ளவிடுவோமா
உடலெனும் கூடு சிதைந்துயிர் போகினும்
கடற்கரும் புலியென பாய்ந்தது போகும்
கடலினில் ஓடம் அலையினில் ஆடும்
தமிழ்நில மாந்தர் நிலையதுகூறும்
உடலினில் மூச்சு நிற்கின்ற வரையில்
கடல்வளம் காக்கும் புலி நாமே

விடுதலை சுமந்து கடலலைமேலே
புயலென விரைந்து புகழ் பொறித்தார்
படுதலை வானம் சிவந்தபின்னாலும்
திரைக்கடல் காக்கப் புறப்படுவார்
கெடுதலை சாய்த்திடக் கொடுதலையென்றே
அலை கடல் மீது அரணமைத்தார்
நீர்நிலை யெங்கும் புலிக்கொடியுடனே
படகுகள் போக வழிசமைத்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழா இது உனக்கு


ஈழமண்ணில் இனக்கொடுமை மலிந்து போச்சு
தமிழிரத்தம் சிந்திமண் சிவந்து போச்சு
களப்பலியாய் இளம்புலிகள் உயிரும் போச்சு - நாம்
தேசமெல்லாம் பரவியென்ன பயன்தான் ஆச்சு

வானூர்தி குண்டுமழை கடற்படைப் பெருந்தாக்கம்
பீரங்கி செல்லடிகள் செல்லரிக்கும் தமிழ்க்குடிலை
கோலத்தில் தமிழீழம் பிணம்நாறும் காடேதான்
ஏலத்தில் விட்டாரோ நம்தமிழர் இனமானம்

இழைத்த தீவதங்கே இறந்திடும் இயக்கவீரர்
பிழைத்ததை பேசிவீண் பொழுதினைக் கழிக்கவேண்டாம்
குலைத்திடும் நாயாய் மண்ணில் வாழ்ந்தது போதுமினி
தழைத்திடும் தமிழைக்காக்க விதியினை சமைப்போம் வாரீர்

பழரசம் குடித்துடல் பருக்க வளர்த்தோம் எங்கள்
பைந்தமிழ் மாந்தரங்கே படுதுயர் நினைத்தோமா
புதியதோர் விதிசெய்வோம் புலிகளின் கரங்கள் ஓங்க
பெரியதோர் நிதிசேர்ப்போம் ஆயுதங்கள் கொள்ள

எமக்கென்ன என்றிருக்கும் தமிழா கேளாய் - புலிகள்
தமக்கென்றா தம்உயிரை தந்தார் மண்ணில்
விடியாத இரவுகளில் சிறைப்பட்ட தமிழர்க்காய்
விளக்காக எரிகின்றார் விடியலை நிதம்தேடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமாடும் மறவர் வாழி

பிறந்தவர் மண்மே லோர்நாள்
இறப்பது நியதி அஃது
பிறந்தநம் மண்ணைக் காக்கக்
களத்திடை போனாலென்ன
இனியொரு காலம் செய்வோம்
தமிழின மானம் காப்போம்
தனியொரு சாதி பேதம்
தவிர்த்தொரு ஈழம் காண்போம்

விநாடியில் உயிரைப் போக்கும்
சயனைட் விடத்தைக் கூட
விடுதலை வேள்வி வேண்டி
அமிழ்தென உண்டு சாவார்
இதந்தரு வசந்தம் ஏது
அடிமையின் வாழ்விலென்று
சுதந்திரப் போரில் தன்னை
களப்பலி ஈந்த மறவர் வாழி

வஞ்சியை அணைக்கும் நல்ல
வாலிபக் கனவையெல்லாம்
வெஞ்சிறை பூட்டி வைத்து
விடுதலைக் காதலாலே
பஞ்சணை படுக்கை யெல்லாம்
வெஞ்சமர்க் களமே யென்று
துஞ்சவு மஞ்சாவீரர்
போற்றிய வீரம் வாழி

தாயினை பழித்தார் என்றால்
தாயதைத் தடுத்தாற் போச்சு
தமிழினை வசைப்பா ரானால்
யாரதைத் தடுத்தா லென்ன
தலையதைப் பறிப்போ மென்ற
புதுவையின் புரட்சிக் கீதம்
இசைத்துவெங் களத்தி லாடும்
புலியின மறவர் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வீரனின் கடைசி யாத்திரை

**கொ**டியில் மலர்ந்த மலர்கள் அத்தனையுமே பூஜைக்கு சென்று விடுவதில்லை .புயலால் உதிர்ந்தவையும் வண்டினால் வஞ்சிக்கப் பட்டவையும் பாடையை அலங்கரிக்கச் சென்ற வையும் மண மேடையில் மங்களம் கண்டவையும் அரசியல் வாதிகளின் தோளேறி அவமானப்பட்டவையும் இப்படிப் பல சூழ்நிலைகளினால் அந்த மலர்கள் தன் மலர்வுக்கு அர்த்தம் கொடுக்காமல் வாழ்வை முடித்துக் கொள்கின்றன.

மானிட சோலைக்குள் மலர்ந்த மானிட மலர்களும் அப்படித் தான் இறப்பு என்கின்ற உண்மையின் உதயமே பிறப்பு. இது பெற்றவரின் தேவையில் விளைந்த சம்பவமே பல மனிதர்களின் வாழ்விலே பிறப்பும் இறப்பும் வெறும் சம்பவங்களாகவே முடிந்து விடுகின்றன.ஆனால் இந்தச்சம்பவங்களைச் சில மனிதர்கள் தம் வாழ்க்கை திறத்தினால் சரித்திரமாக்கி விடுகிறார்கள். இவர்களிலும் சிலரே சாகா இலக்கியங்களை படைக்கும் கர்த்தாக்களாகி விடுகிறார்கள்.

"அரசியல் குடியியல் அமைப்புகளுக்கு ஏற்ப சூழ்நிலை
கருதி நிகழ்கால சமுதாயம் தன் எதிர்கால இலக்கை
அடைவதற்கு அறநெறி வரம்பிற்குள் நின்று தரமான
பாதையை இயம்பி நிற்பதே சாகாவரம் பெற்ற
இலக்கியங்கள்."

இப்படியான மாமனிதர்களின் உடல்கள் மட்டுமே கல்லறைக் குள் செல்கின்றன. ஆனால் மக்கள் தம் நெஞ்சறைகளில் நீங்காத நினைவுகளாக நித்தமும் வாழ்ந்து கொண்டே யிருக்கிறார்கள். இவ்வண்ணம் வையகத்துள் வாள்வாங்கு வாழ்ந்தவர் நிரையிலே முன்வைத்து போற்றவல்ல காவியம் படைத்த விடுதலைப் புலி மறவன் சதாசிவம்-கிருஸ்ணகுமார் கிட்டு தமிழீழக் காவியத்தின் விடுதலைப் படலத்தை விரைந்து எழுதி வந்து பாதியிலே வீரச்சாவை அணைத்துக் கொண்டார். அந்த வீரனின் மறைவால் தமிழ் நெஞ்சங்கள் சோக இருளுக்குள் சிறைப்பட்டுக்கொண்டன.

"ஒரு நியத்தின் மறைவு
பல நினைவுகளின் உதயமாகின்றது
இந்த உதயங்கள்...............................
ஒரு போதும் அஸ்ததமிப்பதில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org